# பகவத் கீதையின் கர்ம யோகமும் அதன் நடைமுறைச்சாத்தியப்பாடும்

LIBRARY
30 OCT 2009
Eastern University, Sri Lanka.

பதிவிலக்கம்: EU/IS/2003/AC/26

இளம் கலைமாணி மெய்யியல் சிறப்பு பட்ட தேர்வின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் முகமாக கிழக்குப்பல்கலைக்கழக சமூகவிஞ்ஞானதுறையின் மெய்யியல் பிரிவுக்கு 2009ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட பெரும் ஆய்வுக்கட்டுரை

FAC12
Project Report
Library - EUSL

மெய்யியல் பிரிவு,
சமூக விஞ்ஞான துறை,
கலை கலாசாரபீடம்,
கிழக்குப்பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை, இலங்கை

PROCESSED
Main Library, EUSL

# முகவுரை

மெய்யியல் (philosophy) எனும் சொல்லானது கிரேக்க மொழிச் சொல்லான "Philosophic" எனும் சொல்லின் திரிபுபடுத்திய வடிவமாகும். மெய்யியல் என்னும் சொல்லின் சரியான அர்த்தம் ஞானத்தை அல்லது உண்மையை நேசித்தல் ஆகும். எனினும் நுணுக்கமான அதன் மொழிபெயர்ப்பில் அதனை அறிவை நேசித்தல் (Love of Knowledge) என கூறலாம். இதனை கருத்திற் கொண்டே ஜெல்லர்ஸ் (Jellers) என்பவர். தமது கருத்தில் மெய்யியலைப் பற்றி கூற முனைகையில் "நமது பாடம் அறிவியல் துறைகளின் தொகுப்பே ஆகும். அறிவாராய்ச்சியில், அளவியல், பிரபஞ்சவியல், அறிவியல், அழகியல் ஆகிய இயல்களும் ஒற்றுமைப்படுத்தும், மதிப்பீடும் ஆகும். என்கின்றார் மெய்யியல் பொதுவாக பிரயோகத் தன்மையற்ற விடயங்களை ஆராயமாட்டாது. அது தன்னாய்விற்கு உட்படுத்தும் விடயங்களினால் யாதாயினும் ஒரு அம்சத்தை மனித வாழ்விற்கு பயன்படக்கூடிய வகையில் வெளிப்படுத்துவதனையே நோக்காகக் கொண்டிருக்கும். அவ்வகையில் மெய்யியலின் ஆய்விற்கு உட்படுத்தியிருக்கும் விடயப்பரப்புக்களே நாம் இன்று பொதுவாக அழைக்கும் விஞ்ஞானங்கள் எனக் கூறலாம். அவ் வகையில் "ஸ்ரெபோ" – என்ற கிரேக்க புவியியல் ஆளரின் கருத்துப்படி புவியியலும் கூட மெய்யியலின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது எனக் கூறினர். பொதுவாக விஞ்ஞானங்கள் மெய்யியலிருந்தே தோற்றம் பெற்றதனால் மெய்யியல் விஞ்ஞானத்தின் தாய் என வர்ணிக்கப்படுகின்றது.

பொதுவாக தத்துவம் என்பது நம்மைச் சுற்றி நிலவும் யாதார்த்தம் பற்றி முழுமையாகவும் மனிதனால் அது அறியப்படுதல் பற்றியும் உள்ள கருத்துக்களின் தொகுப்பாக விளங்குகின்றது. பிரபஞ்சம் முழுவதற்கும் அடிப்படையாக இருப்பது எதுஎன்பதை விளக்கவும் மனிதனது இயல்பை புரிந்து கொள்ளவும் சமூகத்தில் மனிதன் வகிக்கும் இடம் யாது? என்பவற்றை இனம் கண்டுகொள்ள தத்துவம்தான் தோன்றிய கணம் முதலே முயன்று வந்திருக்கின்றது. இந்நிலையில் மெய்யியலின் நோக்கினை பின்வருமாறு கூறுவது பொருத்தமாக இருக்கும். "மெய்யியலின் நோக்கம் பிரபஞ்சத்தத்தின் அடிப்படையினை உணர்வதுடன், மனித வாழ்க்கையின் அர்த்தத்தினையும் தேவையினையும் விளக்குவதாகும்" எனலாம்.

பொதுவாக மெய்யில் எல்லா ஆய்வுத்துறைகளுடனும் தொடர்புபட்ட ஒரு துறையாகவே உள்ளது என கூறலாம். 'அறிவை நேசித்தல்' என்ற அதன்

வரைவிலக்கண நிலையில் எல்லா துறைகளின் அறிவியல் சார்ந்த துறைகளுடனும் அது தொடர்புபடவேண்டியதாகின்றது. இவ்வாறு அது பல்வேறு துறைகளுடன் தொடர்புபடும்போது பல சிறப்புப் பெயர்களை பெற வேண்டியதாயிற்று. மனித வாழ்வுடன் தொடர்புபடுகின்ற அரசியலுடன் மெய்யியல் தொடர்புபடுகையில் அது அரசியல் மெய்யியல் ஆகவும், மனித உளரீதியான விடயங்களுள் தொடர்புபடும் போது அது மனமெய்யியலாகவும் புலன்கடந்த இருப்பினை ஆராயும்போது அது பௌதீகவதீத மெய்யியலாகவும் பெயர்பெறத் தொடங்கியது. அவ்வாறே விஞ்ஞானத்துடன் தொடர்புபடுகையில் அது விஞ்ஞான மெய்யில் எனவும் அழைக்கப்பட்டது. இவ்வாறு பல பிரிவுகளா பரிவதற்கான பிரதான காரணமாக ஆரம்பத்தில் ஒன்றாக இருந்த விஞ்ஞானம் மெய்யியலிருந்து பிரிந்து தனித்தனி துறைகளாக வளர்ச்சியடைந்ததையே கூறலாம்.

இவ்வாறான ஓர் நிலையிலேயே மெய்யில் பகுப்பாக்கம் எனும் அம்சம் (Philosophical Classification) புகுத்தப்பட்டது. மெய்யியலின் ஆய்வு விடய அடிப்படையில் இது நிகழ்த்தப்பட்டது. மெய்யில் கடவுள் இயற்கை அல்லது மனிதன் என்பவற்றுடன் உள்ளடங்கியிருப்பதனால் அது முறையே இறையியல் இயற்கை மெய்யியல், மானிடவியல் எனபிரிவு படத் தொடங்கியது. இவ்வாறான ஓர் பகுப்பாய்வு மெய்யியலை நடைமுறை மெய்யியல், பிரயோக மெய்யியல் எனப் பிரித்தது. இறைவன், உலகம் உளம் என்னும் அம்சங்கள் கொள்கை ரீதியான மெய்யியலுடன் தொடர்புபட ஒழுக்கவியலும் பொருளியலும் அரசியலும் பிரயோக மெய்யியலுடன தொடர்புபட்டது. இவ்விரு மெய்யியற் பிரிவுகளும் அடிப்படையில் தர்க்கவியல் எனும் விஞ்ஞானத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றது. இவ்வாறான ஒரு வகையீட்டின் மெய்யியலின் ஆய்வு பங்களிப்பினை ஏனைய துறைகளில் காணக்கூடியதாக இருக்கின்றது. அவ்வகையில் பிரயோக மெய்யியல் உள்ளடங்கும் ஒரு அம்சமே எனது ஆய்விற்கு உட்படும் ஓர் அம்சமாகும்.

உலகில் உள்ள ஒவ்வொரு ஜீவனும் அன்றாடம் செயலினைச் செய்ய வேண்டும் எனவும், அச் செயல்கள் சாஸ்திர விதிப்படியும் வர்ணாச்சிரம நியதியின் படியும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் எனவும் பகவத்கீதையில் கண்ணபிரான் குறிப்பிட்டது மட்டுமின்றி அவற்றினை பற்றற்றுச் செய்ய வேண்டும் எனவும் அதாவது "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என குறிப்பிட்டு செயலினை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது பற்றிய விளக்கத்தினையும் தந்துள்ளார். இவ்வாறு கீழைத்தேய மரபில் கர்மம்

செய்வது பற்றற்றுச் செய்தல் வேண்டும் என்பதனை கீதை புகட்ட மேற்கத்தேய சிந்தனை மரபில் இம்மானுவேல் காண்ட் என்பவருடைய சார்பற்ற கடப்பாடு என்ற பற்றில்லாக் கர்மம் பற்றிய சிந்தனையினையும் நான் எனது ஆய்வில் ஒப்பீடுசெய்து மனித கர்மம் பற்றியதான சிந்தனையினை நோக்கியுள்ளேன்.

மேலும்பகவத்கீதையில் கர்மயோகம் குறிப்பிடும் பற்றற்ற கர்மமும் நடைமுறைச் சாத்தியமும் என்ற தலைப்பின் கீழான எனது ஆய்வினை நான் முன்னெடுத்துச் செல்லும் முகமாக நான் எனது முதலாம் அத்தியாயத்தில் ஆய்வின் அறிமுகம், ஆய்வின் பிரச்சினை, ஆய்வின் கருதுகோள் மற்றும் ஆய்விற்கான முதன்மை மற்றும் துணைக் காணிகள் பற்றி விளக்கியுள்ளேன்.

இரண்டாம் அத்தியாயத்தில் பகவத் கீதையே எனது ஆய்வில் முதன்நிலை வகிப்பதனால் அந் நூல் பற்றியதொரு அறிமுகம் அதற்கு பல்வேறு அறிஞர்களால் கொடுக்கப்பட்ட விளக்கவுரைகள், பகவத்கீதையின் உபதேசம் சாத்தியமானதா? என்பது பற்றியும். அது குறிப்பிடும் முக்கிய யோகங்கள் பற்றியும் அது குறிப்பிடும் யோகங்களையும் குறிப்பிட்டுள்ளேன்.

மூன்றாம் அத்தியாயத்தில் எனது ஆய்வில் கர்மம் முக்கிய இடம் வகிப்பதனால் கர்மம் பற்றியதானதோர் அறிமுகம் பற்றியும் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம், பௌத்தம் போன்ற மதங்கள் கர்மம் பற்றி குறிப்பிடுவதனையும் பகவத் கீதையில் கர்மம் பற்றியும் விளக்கியுள்ளேன்.

மேலும் நான்காம் அத்தியாயத்தில் மேற்கத்தேய சிந்தனை மரபில் பற்றற்ற கர்மம் பற்றிய தனது சிந்தனைகளை வெளிப்படுத்திய இம்மானுவேல் காண்ட் என்பார் பற்றியதொரு அறிமுகத்தினையும் அவர் குறிப்பிட்ட பற்றற்ற கர்மம் பற்றியும் கர்மயோகம் குறிப்பிடும் கர்மத்தினையும் காண்டின் சார்பற்ற கடப்பாட்டினையும் ஒப்பீடு செய்துள்ளேன்.

5ம் அத்தியாயத்தில் மேற்கண்ட 3ம் 4ம் அத்தியாயங்களில் நாம் கர்மம் பற்றி விளக்கும்போது அவை பெரும்பாலும் ஒழுக்கத்தினை மையமாகக் கொண்டே கர்மம் செயற்படுத்தப்பட்டிருப்பதன் அடிப்படையில் தான் ஒழுக்கவியல் பற்றியதோர் அறிமுகத்தினையும் அதன் ஊடாக மேற்கத்தேய ஒழுக்கவியல் மற்றும் இந்திய ஒழுக்கவியல் என இரண்டாக வகுத்து நான் ஒழுக்கவியல் எனும் அம்சத்தினை விளக்கியுள்ளேன்.

அத்தியாயம் ஆறில் நான் கர்மயோகம் குறிப்பிடும் பற்றற்ற கடப்பாடென்பது இற்றைய சூழ்நிலையில் சாத்தியமாகுமா? என்பதனைப் பற்றியும் அது இன்று நடைமுறையில் உள்ள சுதேசியச்சட்டத்துடன் கொண்டுள்ள உறவினையும் நோக்கி எனது ஆய்வினை நிகழ்த்தியுள்ளேன்.

இறுதியாக இவை அனைத்தினையும் தொகுத்து எனது முடிவினைப் பெற்றுள்ளேன்.

## பொருளடக்கம்


| | பக்க எண் |
|---|---|
| நன்றியுரை | I |
| முன்னுரை | II - V |
| பொருளடக்கம் | VI - VII |
| 1. அத்தியாயம் 01 | 01 - 02 |
| 1.1. ஆய்வின் அறிமுகம் | 01 |
| 1.2. ஆய்வின் பிரச்சினை | 02 |
| 1.3. ஆய்வின் கருதுகோள் | 02 |
| 1.4. ஆய்வு முறை. | 02 |
| 2. அத்தியாயம் 02 | 03 - 24 |
| 2.1. பகவத்கீதை பற்றிய அறிமுகம் | 03 |
| 2.2. பகவத்கீதை பற்றிய விளக்கவுரை | 06 |
| 2.3. பகவத்கீதை குறிப்பிடும் யோகங்கள் | 10 |
| 2.3.1. பக்தி யோகம் | 13 |
| 2.3.2. ஞான யோகம். | 16 |
| 2.3.3 கர்ம யோகம் | 19 |
| 2.4. பகவத்கீதையின் சாத்தியப்பாடு | 22 |
| 3. அத்தியாயம் 03 | 25 - 44 |
| 3.1. சமய நோக்கில் கர்மம் | 25 |
| 3.2. இந்துமதம் சுட்டும் கர்மம் | 28 |
| 3.3 கிறிஸ்தவ மதம் சுட்டும் கர்மம் | 32 |
| 3.3. இஸ்லாம் சொல்லும் கர்மம் | 34 |
| 3.4. பௌத்த மதத்தில் கர்மம் | 37 |
| 3.5. பகவத் கீதையில் கர்மம் | 41 |
| 4. அத்தியாயம் 04 | 45 - 63 |
| 4.1. ஒழுக்கவியலுக்கோர் அறிமுகம் | 45 |
| 4.2. இந்திய ஒழுக்கவியலுக்கோர் சுருக்க அறிமுகம் | 59 |

| | | |
|---|---|---|
| 5. | அத்தியாயம் 05 | 64 - 88 |
| 5.1. | இம்மானுவேல் காண்ட் பற்றிய அறிமுகம் | 64 |
| 5.2. | காண்டின் சார்பற்ற கடப்பாடு | 73 |
| 5.3. | கர்மயோகமும் காண்டின் சார்பற்ற கடப்பாடும் ஓர் ஒப்பீடு | 82 |
| 6. | அத்தியாயம் 06 | 89 - 104 |
| 6.1. | நடைமுறையில் கர்மயோகத்தின் சாத்தியம் | 89 |
| 6.2. | கர்ம யோகமும் சுதேசியச்சட்டமும் | 98 |
| 7. | அத்தியாயம் - முடிவுரை | 105 |
| | உசாத்துணை நூல்கள் | |